**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**

ம.சா. 1 தேதி. 01.04.2025

| MCOP. No. | 65/2021 | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னசாமி | த/பெ, | செல்லக்கண்ணு |
| வயது | 60 | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | 131, ஆனதாண்டவபுரம் | தாலுக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் அருள்மொழியின் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனது தரப்பில் ஆவணங்களாக 20.04.2019 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ.1** ஆகவும், 11.05.2019 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி நகல் **ம.சா.ஆ.2** ஆகவும், 15.04.2019 தேதியிட்ட விபத்து பதிவேடு **ம.சா.ஆ.3** ஆகவும், 06.03.2013 தேதியிட்ட வாகன பதிவேடு நகல் **ம.சா.ஆ.4** ஆகவும், 07.03.1990 ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா.ஆ.5** ஆகவும், 28.04.2018 தேதியிட்ட பாலிசி நகல் **ம.சா.ஆ.6** ஆகவும், மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் **ம.சா.ஆ.7** ஆகவும், மருத்துவ ரசீதுகள் அசல் (ஆட்சேபனையுடன்) **ம.சா.ஆ.8** ஆகவும், விபத்து (TN51 AZ 5261) ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் **ம.சா.ஆ.9** ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் **ம.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.